1993 அக்டோபர் 27]

செய்யலாம். ஆனால் பொதுவாக குறிப்பிட்டு சொல்லும் போது உதாரணமாக 75 லட்சம் ரூபாயைக் கொடுத்து அதிலே 75 சதவீதத்தை தன்னிறைவுத் திட்டத்திற்கும் மீதி 25 சத வீதத்தை தங்கள் விருப்பம் போல முக்கியமான பணிகளுக்கு அதாவது மணி கூண்டு கட்ட அல்லது, மன மகிழ் மன்றங்கள் வைக்க, அல்லது வண்ண தொலைக்காட்சிப் பெட்டியை குறிப்பிட்ட இடங்களில் வைப்பது போன்ற செயல்களை மாவட்ட ஆட்சித் தலைவர் செய்யலாம். அதை தன்னிறைவுத் திட்டங்களில் கூட செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போன்று தன்னிறைவுத் திட்டங் களுக்கு செலவழிப்பதிலே எங்கு குறைவாக இருக்கிறதோ, எங்கே தேவைப்படுகிறதோ அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் தங்களுடைய தன்மைக்கு ஏற்ப எடுத்துச் செய்யலாம். அதைத்தான் நான் சொன்னேன். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தக் கருத்துக்களை எடுத்து வைப்பார்களேயானால் அதனை உணர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கு ஏற்ப நடந்து கொள்வார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 22 திரு. ஆ. சுப்புரத்தினம் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்

22—

இலவச சட்ட உதவித் திட்டங்களுக்கு மத்திய அரசு உதவி

*20135— திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாநில அரசு செயல்படுத்தும் இலவச சட்ட உதவித் திட்டங்களுக்கு மத்திய அரசிடமிருந்து நிதி உதவி கிடைக்கிறதா,

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனைக்குழு மத்திய அரசின் மானியத்தை, சட்ட உதவித் திட்டங்களை செயற்படுத்தும் குழு (Committee for Implementing Legal Aid Schemes) மூலமாகப் பெறுகிறது. 1990-91, 1991-92 மற்றும் 992-93 ஆகிய பிரதி ஆண்டிலும் ரூ. 4 இலட்சம்

பெறப்பட்டது இம்மான்யம், சட்ட உதவி முகாம், சமரச மையங்கள், பெண்களுக்கான மையங்கள், மக்கள் நீதிமன்றங்கள் ஆகியவற்றுக்கு செலவழிக்கப்படும் பணத்தை திரும்பப் பெறுவதற்கு (Re-Imbursement) பயன்படுத்தப்படுகிறது.

முற்பகல் 10—10

திரு. ஆ. சுப்புரத்தினம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு செயல்படுத்தும் இலவச சட்ட உதவித் திட்டங்களுக்கு, மத்திய அரசினுடைய உதவி கிடைப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கோடிட்டுக்காண்பித்தார்கள். ஆனால் ஆண்டுக்கு நான்கு இலட்சம் தான் மத்திய அரசினால் மானியமாக அளிக்கப்படுகிறது என்பதை எண்ணும்போது வருத்தமாக இருக்கிறது. இந்தத் தொகை மிகக் குறைவானதொகையாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு இலவச சட்ட உதவி இந்த நாட்டில் வாழக் கூடிய ஏழை எளிய பாட்டாளி மக்களுக்கு மிகப் பெரிய பயன் அளிக்கக் கூடியதாக இருக்கிறது. அவர்கள் தங்களுடைய குடும்ப வழக்கானாலும் வாழ்க்கைப் பிரச்சினைகளானாலும் பணமின்றி தவிக்கக் கூடியவர்கள் இந்தத் திட்டத்தை அணுகி வாழ்வு பெற்று வருகிறார்கள். எனவே இப்படிப்பட்ட சமுதாய நோக்கு கொண்ட திட்டத்திற்கு மத்திய அரசினுடைய பங்கை அதிகரிக்க வேண்டும் என்று மாநில அரசு கோரிக்கை விடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினால், நான்கு இலட்சம் ரூபாய் மானியமாக ஆண்டு தோறும் அளிக்கப்படுகிறது. ஆனால் தமிழக அரசில், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இந்த ஆண்டு 91 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கி சாமானியமான ஏழை எளிய மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக இலவச சட்ட உதவிகள் செய்யப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஒரு குறை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. இது மத்திய அரசுக்கும் தெரியும். தெரிந்த காரணத்தினாலேதான் 1987 ஆம் ஆண்டு Legal Services Authority Act. என்ற ஒரு சட்டத்தை கொண்டு வந்த மத்திய மாநில சர்க்கார்கள் நடத்துவதைவிட Dual Agency இதை மாநில அரசங்கமும் நடத்தி, மத்திய அரசாங்கமும் யானைப் பசிக்கு சாதாரண சோளப் பொரி கொடுப்பது போல— இங்கே 91 இலட்சம் கொடுக்கிறோம், அங்கே 4 இலட்சம் கொடுக்கிறார்கள். ஆக இந்த ‘அனாமலி’ போவதற்காக நீதி மன்றத்தில் இருக்கின்ற நீதிபதிகள் எல்லாம் வற்புறுத்த பொதுமக்கள் வற்புறுத்த, மாநிலங்கள் வற்புறுத்த 1987-லே ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். Legal Services Authority Act

1993 அக்டோபர் 27]

மூலம் மத்திய அரசிலேயும் ஒரு போர்டு, மாநில அரசிலேயும் ஒரு போர்டு வைத்து, இந்தியாவெங்கும் எல்லா மாநிலத்திலும் சீராக இதற்கு நிதியாதாரங்களைத் தேடி, இந்தத் திட்டத்தை அமல்படுத்த முயன்றார்கள். அந்தச் சட்டமும் நிறைவேறியது. இரண்டு அவைகளிலும் நிறைவேறியது. லோக் சபாவிலும் நிறைவேறியது, ராஜ்ய சபாவிலும் நிறைவேறியது. சட்டம் நிறைவேறி ஜனாதிபதியும் ஒப்புதலும் அளித்து விட்டார். ஆனால் அதற்குள் ஒரு விவாதம் வந்து விட்டது. அந்தச் சட்டத்திலே குறை இருக்கிறது. முறைகேடுகள் இருக்கின்றன. சரியாக இல்லை என்ற காரணத்தினாலே நோட்டிபிகேஷனை மத்திய அரசாங்கம் செய்யவில்லை. அதனாலே அந்தச் சட்டம் செயல்படவில்லை. பிறகு 1991 ஆவது ஆண்டு அதே சட்டத்தை ராஜ்ய சபாவிலே இன்ட்ரடியூஸ் செய்து, கன்சிடர் செய்து, அதை பாஸ் செய்து அந்த நிலையிலேயே இன்றைக்கு மத்திய சர்க்கார் அந்தச் சட்டத்தை வைத்திருக்கிறது. அதை லோக்சபாவுக்கு அனுப்பவில்லை. தமிழக அரசும், தமிழக அரசு போன்ற மற்ற அரசுகளும் வற்புறுத்தியதன் பேரில் உடனடியாக மத்திய அரசாங்கம் Leg l Services Authority Act, 1991 என்ற அந்தச் சட்டத்தை உடனடியாக லோக் சபாவில் நிறைவேற்றி, பிரசிடெண்ட் இடத்திலே அப்ரூவல் வாங்கி, அதை நோட்டிபிகேஷன் செய்து உரிய வகையிலே சென்ட்ரல் அத்தாரிட்டி, ஸ்டேட் அத்தாரிட்டிகளை உருவாக்கி, அதன் மூலம் 1977-ஆவது ஆண்டு அன்பிற்குரிய மரியாதைக்குரிய அன்றைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் கொண்டு வந்த திட்டத்தை மத்திய அரசாங்கம் துரிதமாக நிறைவேற்றுவார்கள். அப்போது நிச்சயமாக அதிக நிதியாதாரங்கள் கிடைக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பொற்கால ஆட்சி நடத்தி வரக்கூடிய இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற முதல்வரும் 21-ஆம் நூற்றாண்டுக்கு இந்த நாட்டை வழி நடத்திச் செல்லக்கூடிய தனிப்பெரும் தலைவியாக விளங்கி வருபவருமான இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த இலவச சட்ட உதவி கிடைக்க 91 இலட்சம் ரூபாய் வழங்கி, வள்ளல் தன்மைக்கு முன்னுதாரணமாக விளங்கி வருவதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். இன்றைக்கு இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் எப்பேற்பட்ட இடர்ப்பாடுகள் இருக்கின்றன என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாக எடுத்து இயம்பினார்கள். நான் அவரிடம் வேண்டுவது, இந்த சமுதாய நோக்கு கொண்ட இந்தத் திட்டத்தை, ஏழை எளிய மக்கள் பயன்

படுத்தக்கூடிய, இந்தத் திட்டத்தை, இன்னும் சிறப்பாக 'புராபகண்டா' செய்தால் ஏழை எளிய மக்கள் பயன்பெற வாய்ப் படும். ஆகவே அந்த வகையில் 'புராபகண்டா' செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் டெல்லியில் ஒரு மாநாடு நடைபெறவிருக்கிறது. அந்த மாநாட்டில் இந்தியப் பிரதமர் மாண்புமிகு திரு. நரசிம்மராவ் அவர்கள் தலைமை ஏற்கவிருக்கிறார்கள். அந்த மாநாட்டுக்கு அனைத்து மாநில தலைமை நீதிபதிகளும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். எல்லா மாநில முதலமைச்சர்களும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். எல்லா மாநில சட்ட அமைச்சர்களும் அழைக்கப்பட்டு அந்தக் கூட்டத்தில் இதுபோன்ற பிரச்சினைகளை எல்லாம் தீர்ப்பதற்காக மத்திய அரசு முயற்சி எடுத்து வருகிறது. அதற்கான தகவல்களை மாநில அரசுகளுக்கு தெரிவித்திருக்கிறது. நாங்களும் அந்த மாநாட்டில் இதுபோன்ற பிரச்சினைகளை உறுதியாக வலியுறுத்தி இதுபோன்ற பிரச்சினைகளில் இருக்கின்ற சங்கடங்களைத் தீர்க்க முயற்சி செய்வோம் என்பதை இந்த மாமன்றத்திற்கு உங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசும், மாநில அரசுகளும் ஏழை மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இலவச சட்ட உதவித் திட்டத்தை ஏற்படுத்தி இலவசமாக ஏழை மக்களுக்கு ஆஜர் ஆகின்ற அந்த வக்கீல்களுக்கு அரசு பீஸ் வழங்குகின்ற ஒரு திட்டமாக இருந்தபோதிலும் கூட சென்னையில் இருக்கின்ற இலவச சட்ட மையத்திற்கு நான் சில பெண்களை அழைத்துச் சென்றிருக்கிறேன். அவர்கள் இந்த வழக்கறிஞர் இதற்கு ஆஜர் ஆவார்கள் என்று காண்பித்து இருக்கிறார்கள். கணவனால் கைவிடப்பட்ட பெண்களிடம், வழக்கறிஞர் இவ்வளவு ரூபாய் கொண்டு வந்தால் தான் அந்த வழக்கில் ஆஜர் ஆக முடியும், நோட்டீஸ் அனுப்ப முடியும் என்ற நிலையிலே ஏறத்தாழ 2 ஆண்டு காலமாக அந்த வழக்குக்கு நான் போய் ரெப்ரசென்ட் செய்து கூட பயன் அற்ற நிலையில்

இருக்கிறது. இந்த மையத்தைச் சார்ந்தவர்களை ஒரு பெண் அணுகியபிறகு பொறுப்பு கொடுக்கப்பட்ட அந்த வழக்கறிஞர் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தால் அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் வகையில் அதில் கவனம் செலுத்தி அரசு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாக யார் அந்த வழக்கறிஞர்? என்ன விவரம் என்பதை எழுதிக் கொடுத்தால் நிச்சயமாக உரிய நடவடிக்கை துரிதமாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 23. திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

23—

முத்துப் பேட்டையை தலைமையிடமாகக் கொண்டு தனி தாலுகா அமைத்தல்.

*14008—திரு. ஜி. பழனிசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம், முத்துப் பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு முத்துப்பேட்டை தாலுகா அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்துப் பேட்டையில் புதிய வட்டம் அமைக்கும் நோக்கம் இல்லை.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை—காயிதே மில்லத் மாவட்டம், முத்துப் பேட்டை ஊராட்சி ஒன்றியம் என்பது திருத்துறைப்பூண்டியிலிருந்து 35 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் இருக்கக் கூடிய ஊர். அது ஒரு தனி ஊராட்சி ஒன்றியமாக செயல் பட்க்கூடிய அளவுக்கு 28 ஊராட்சி மன்றங்களைக் கொண்